# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.217/2022

Deposition of witness for Prosecution – PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : காளியப்பன் | Caste | : |
| S/o. | : அர்த்தனாரி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 21.08.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் சங்ககிரி வட்டம் செட்டிப்பட்டியில் வன்னியர் தெருவில் குடியிருக்கிறேன். நான் பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். வழக்கில் இறந்துபோன ஆனந்தனை எனக்குத் தெரியும்.

சுமார் 3 வருடத்திற்கு முன்னர் ஊரில் ஒரு பண்டிகை நடந்தது. பூசாரி ஆனந்தனை காத்தவராயன் (எ) போர்மன்னன் வெட்டிவிட்டதாக கேள்விப்பட்டேன். நான், எதிரி போர்மன்னன், இறந்துபோன ஆனந்தன்

மற்றும் ஆனந்தனின் மகன் சித்தநாதன் மற்றும் ராமலிங்கம் சேர்ந்து கூட்டாக மரம் உடைக்கும் மிஷின் போட்டிருந்தோம். அதில் ஒவ்வொருவரும் தலா ரூ.90,000/- முதலீடு செய்திருந்தோம். மீதி தொகைக்கு வங்கி மூலம் கடன் பெற்றோம்.

எதிரியின் மனைவி துணி துவைக்கும்போது தவறி கிணற்றில் விழுந்து இறந்துவிட்டார். அதனால் என்னால் தொழிலுக்கு வரமுடியாது என்றும் தன்னை கூட்டிலிருந்து விடுவித்துவிடுமாறு எதிரி கேட்டார். எனவே எதிரிக்கு ரூ,95,000/- அவரது பங்காக கொடுத்துவிட்டோம். இறந்த ஆனந்தனிடம் எதிரி மேற்கொண்டு பணம் வேண்டும் என்று கேட்டார். அதற்கு ஆனந்தன் தர முடியாது என்று மறுத்துவிட்டார். அதனால் அவர்களுக்குள் மனஸ்தாபம் இருந்தது. எதிரி, தன்னுடைய மனைவி இறந்ததற்கு இறந்துபோன ஆனந்தனிடம் நீதான் சூனியம் வைத்து தனது மனைவி இறந்துவிட்டதாக கூறி வந்தார். இறந்துபோன ஆனந்தனுக்கும் எதிரிக்கும் சீட்டு போட்டு வந்ததில் பிரச்சனை ஏற்பட்டு அவர்களுக்குள் விரோதம் இருந்தது.

சுமார் 3 வருடத்திற்கு முன்னர் இறந்துபோன ஆனந்தனின் மகனும் மற்றொரு சாட்சி ஆனந்தனும் பாத்ரூம் போகும்போது எதிரி அருவாளுடன் சென்றதை பார்த்ததாக பேசிக்கொண்டார்கள். எதிரி ஆற்றோரத்தில் உள்ள துர்கையம்மன் கோவிலில் தினமும் படுத்துக்கொள்வார். அப்போதுதான் இறந்துவிட்டதாக கூறினார்கள். கோவிலில் படுத்திருந்தபோதுதான் வெட்டப்பட்டு இறந்துவிட்டதாக கூறினார்கள். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நானும், ஆனந்தனும், சித்தநாதன் மற்றும் எதிரியும், எவ்வளவு நாட்களாக கூட்டாக தொழில் செய்தோம் என்றால் ஒரு வருடம் தொழில் செய்தோம். எங்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டு பிரிந்து கொண்டோம் என்றால் சரி. அ.சா.1 சித்தநாதன் டிராக்டரையும் கட்டை உடைக்கும் மிஷினையும் எடுத்து சென்றுவிட்டார் என்றா்ல் சரி. அதனால் எதிரிக்கும் அ.சா.1க்கும் 10 வருடமாக பேச்சு வார்த்தையில்லை என்றால் சரி. டிராக்டருக்கு பணம் கொடுக்கதாததால்தான் முன்விரோதம் என்றால் சரி. மேற்படி விவரத்தை போலிஸ் விசாரணையில் கூறி உள்ளேன் என்றால் சரி.

பூசாரி ஆனந்தனுக்கும் எதிரிக்கும் எந்த முன்விரோதமும் இல்லை என்றும், அ.சா.1க்கும் எதிரிக்கும் இருந்த முன்விரோதத்தை வைத்து வேறு வகையில் நடந்த சம்பவத்தை வைத்து எதிரி மீது அ.சா.1 கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.